# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்

## தேர்தல் ஆணையத்தின் உருவாக்கம்:

இந்திய அரசியலமைப்பு (97வது திருத்த) சட்டம், 2011 மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்ட பகுதி IX–Bல் உள்ள அரசியலமைப்பு சட்டப்பிரிவு 243ZKன்படி கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்திட 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்ட புதிய சட்டப்பிரிவு 33–Aஇன் கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு 33(11)(b)இல் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தேர்தல் அட்டவணை தயாரித்தல் மற்றும் அனைத்து தேர்தல்கள் நடத்தப்படுவதை கண்காணித்தல், வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாடு செய்வதானது பிரிவு 33–Aஇன் கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் தமிழ்நாடுஅரசால் நியமிக்கப்படுபவராவார்.

## இதர செயற்பதிவாளர்கள்:–

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள், 1988 இன் விதி 52–A(3)இன் கீழ், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையம், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர செயற்பதிவாளர்களான பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், மீன் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி), தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர், வேளாண்மைத் துறை இயக்குநர், பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர், ஒருங்கிணைந்த

குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் ஆணையர், சர்க்கரைத் துறை இயக்குநர் ஆகியோரை மாநில தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்துள்ளது.

## <u>தேர்தல் ஆணையத்தின் பணிகள்:–</u>

1. கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த உறுப்பினர் மற்றும் நிர்வாகிகள் தேர்தல் நடத்துதல்; தற்போதுள்ள அல்லது எதிர்கால காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக தேர்தலை எந்த நேரத்திலும் நடத்த ஏற்பாடு செய்தல்
2. கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்டக் கண்காணிப்பாளருக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்; தேர்தல் தொடர்பான எந்த ஒரு நிர்வாக மாஜிஸ்திரேட் அல்லது எந்த ஒரு காவல் அதிகாரிக்கும் தேவையான வழிகாட்டுதலை வழங்குதல்
3. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழுக்கள் மற்றும் தலைவர்கள்/ துணைத்தலைவர்கள் மற்றும் தேர்தல் நடத்துவதற்காக தேர்தல் கடமையைச் செய்ய நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஏதேனும் வழிகாட்டுதல்கள் அல்லது அறிவுரைகள் வழங்குதல்.
4. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், சட்டப்பிரிவு 3இன் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/ செயற்பதிவாளர்களை, மாநில தேர்தல் அதிகாரிகளாக அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் நியமித்தல்.
5. கூட்டுறவுத் துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை மாவட்டத் தேர்தல் அலுவலர்களாக நியமித்தல்.
6. கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட அலுவலர்கள், தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் ஒழுக்கத்திற்குட்பட்டவர்களாவர்.
7. தேர்தலை நடத்துவதற்குத் தேவையான, பொதுவான அல்லது குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை தேவைப்படும் நேரத்தில் சட்டம் மற்றும் விதிகளுக்குகந்து அளிப்பது.
8. 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் 52, 52–A மற்றும் 53 ஆகிய விதிகளை நடைமுறைப்படுத்துவதிலோ அல்லது தேர்தலை

நடத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டாலோ, அச்சிரமத்தை நீக்கும் நோக்கத்திற்காகத் தேவையான எதையும் செய்தல்.

9. தேர்தல் ஆணையத்தால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேதிகள் மற்றும் காலங்கள் இல்லாமல் தேவைக்கேற்ப புதிதாக தேதிகள் மற்றும் காலவரை நிர்ணயிக்க மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் வழங்குதல்

10. தேர்தல் ஆணையத்தின் கருத்தின்படி, எந்தவொரு அதிகாரியும், அவரது செயல்பாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு ஏதேனும் தீங்கு செய்ததாகக் கண்டறியப்பட்டால், அவருக்குப் பதிலாக தேர்தல் ஆணையத்தின் மூலம் தகுதியான மற்றொரு அதிகாரியை நியமிப்பது.

11. கூட்டுறவுத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையம் கருதினால், அத்தேர்தலை ரத்து செய்தல்.

12. தலைவர்/துணைத்தலைவர் தேர்தலை ஒத்திவைக்க அல்லது அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட தேதியை மேலும் ஒத்திவைக்க வழிகாட்டுதல்.


13. நிறுத்தப்பட்ட, ரத்து செய்யப்பட்ட அல்லது ஒத்திவைக்கப்பட்ட எந்தவொரு தேர்தலையும், அது ஒத்திவைக்கப்பட்ட நிலையிலிருந்து அல்லது ஆணையத்தால் தீர்மானிக்கப்பட்ட முந்தைய கட்டத்தில் இருந்து மீண்டும் தொடங்குதல்

14. தேர்தல் பார்வையாளர்களை நியமித்தல்.

## தேர்தல் ஆணையத்தின் தொலைபேசி எண்கள்:

| வ.எண் | அலுவலர்கள் | தொலைபேசி |
|---|---|---|
| 1 | தேர்தல் ஆணையர் | 044–24331402 |
| 2 | செயலாளர் | 044–24321407 |
| 3 | அலுவலகம் | 044–24351403 |

## தேர்தல் ஆணையத்தின் அலுவலக அமைப்பு:–




## பதிவாளர் மற்றும் இதர செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை

| வ. எண். | செயற்பதிவாளர்களின் பெயர் | சங்கங்களின் மொத்த எண்ணிக்கை | தொடக்க சங்கங்கள் | மத்தியச் சங்கங்கள் | தலைமைச் சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 7628 | 7490 | 131 | 7 |
| | **பிற செயற்பதிவாளர்கள்** | | | | |
| 2 | பால் உற்பத்தி மற்றும் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் | 10449 | 10423 | 25 | 1 |
| 3 | மீன் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் | 1456 | 1443 | 12 | 1 |
| 4 | கைத்தறி இயக்குநர் | 1348 | 1332 | 14 | 2 |
| 5 | துணிநூல் இயக்குநர் | 7 | 0 | 6 | 1 |
| 6 | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) | 749 | 748 | 0 | 1 |
| 7 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 729 | 720 | 8 | 1 |
| 8 | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் | 300 | 287 | 11 | 2 |
| 9 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 154 | 153 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் | 107 | 107 | 0 | 0 |
| 11 | வேளாண்மைத்துறை இயக்குநர் | 102 | 92 | 10 | 0 |
| 12 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் | 100 | 99 | 1 | 0 |
| 13 | பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் | 26 | 25 | 0 | 1 |
| 14 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகளின் ஆணையர் | 25 | 25 | 0 | 0 |
| 15 | சர்க்கரைத் துறை இயக்குநர் | 17 | – | 16 | 1 |
| **மொத்தம்** | | **23197** | **22944** | **235** | **18** |

**<u>பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் சமூக நீதி வழங்குதல்:–</u>**

2013 ஆம் ஆண்டில், 97வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 2011ன் படி, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், சமூக நீதிக்கு உத்தரவாதம் அளிக்கவும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழுவில் 18% பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும், 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>ஒட்டுமொத்த தேர்தல்களின் கட்டங்கள் மற்றும் நிலைகள்:–</u>**

| கட்டங்கள் | நிலைகள் |
|---|---|
| **முதற்கட்டம்:–**<br>அனைத்து தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவு விற்பனைச் சங்கம் தவிர்த்து) | 1 ஆம் நிலை<br>2 ஆம் நிலை<br>3 ஆம் நிலை<br>4 ஆம் நிலை |
| **இரண்டாம் கட்டம்:–**<br>கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மத்தியச் சங்கங்கள் | |
| **மூன்றாம் கட்டம்:–**<br>மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அனைத்து தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் (தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தவிர்த்து) மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் | |

| |
|---|
| **நான்காம் கட்டம்:–**<br>மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி |
| **ஐந்தாம் கட்டம்:–**<br>தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (தேர்தல் திட்டம் அறிவிக்கப்படவில்லை) |

## ஒட்டுமொத்த தேர்தல்கள் 2013:–

தமிழ்நாட்டில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள 22,552 சங்கங்களுக்கு 2013 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டு, 2,04,889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## ஒட்டுமொத்த தேர்தல்கள் 2018:–

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டு தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக்காலம் ஏப்ரல் 2018 ஆம் ஆண்டு முடிவடைந்து விட்ட நிலையில், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள 18,805 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக அறிவிக்கப்பட்டது.

18,805 கூட்டுறவுச் சங்கங்களில், 18,249 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.

தற்போது, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் சுமார் 23,197 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக்காலம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்தது.

இதற்கிடையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.5171/2023 இல் ஒரு பொது நல வழக்கு (PIL) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், 28.04.2023 அன்று தனது இறுதி உத்தரவில், அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் தகுதியான உறுப்பினர்களை

சேர்க்கவும், இறந்த / இடம்பெயர்ந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்கவும் உத்தரவிட்டதுடன், 6 மாத கால அவகாசம் வழங்கி, அதன் பிறகு கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த உத்தரவிட்டது.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக்காலம் நிறைவடைந்த பிறகு, பதவிக்காலம் முடிந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலாட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் அறிவுரையின்படி கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் பட்டியலைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

## கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்:–

தமிழ்நாடு அரசால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012–இன்படி 33–A என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்படத் துவங்கியது. தமிழ்நாட்டில். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கூட்டுறவுத் துறைக்கான மாநில தேர்தல் அதிகாரியாக செயல்படுகிறார்,

## ஒட்டுமொத்த தேர்தல்கள் 2013:–

22552 கூட்டுறவுச் சங்கங்களில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள 7422 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு 79090 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில், 7351 தலைவர்களாகவும் மற்றும் 7350 துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றனர்.

## 2018ஆம் ஆண்டு ஒட்டுமொத்த தேர்தல்களின் கட்டங்கள் மற்றும் நிலைகள்

| கட்டங்கள் | நிலைகள் | 2018 ஆம் ஆண்டில் தேர்தல் திட்டமிடப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **முதற்கட்டம்:–** அனைத்து தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவு விற்பனைச் சங்கம் தவிர்த்து) | 1 ஆம் நிலை | 7084 |
| | 2 ஆம் நிலை | |
| | 3 ஆம் நிலை | |
| | 4 ஆம் நிலை | |
| **இரண்டாம் கட்டம்:–** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | | 113 |

| | |
|---|---|
| **மூன்றாம் கட்டம்:–**<br>மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அனைத்து தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் (தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தவிர்த்து) மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் | 61 |
| **நான்காம் கட்டம்:–**<br>மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 57 |
| **ஐந்தாம் கட்டம்:–**<br>தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் (தேர்தல் திட்டம் அறிவிக்கப்படவில்லை) | 1 |

**ஒட்டுமொத்தத் தேர்தல்கள் 2018:–**

2013ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் 5 ஆண்டு பதவிக் காலம் ஏப்ரல் 2018 இல் நிறைவடைந்த நிலையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள 18805 கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஏப்ரல் 2018இல் மாநில கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையத்தால் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்டது.

மேற்படி, 18805 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள 7101 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு 77204 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில், 7049 தலைவர்களாகவும் மற்றும் 7047 துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றனர்.


தற்போது, 18.10.2023 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள சங்கங்களையும் சேர்த்து சுமார் 7628 கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக்காலம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்தது.

இதற்கிடையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.5171/2023 இல் ஒரு பொது நல வழக்கு (PIL) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், 28.04.2023 அன்று தனது இறுதி உத்தரவில், அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் தகுதியான உறுப்பினர்களை சேர்க்கவும், இறந்த / இடம்பெயர்ந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்கவும்

உத்தரவிட்டதுடன், 6 மாத கால அவகாசம் வழங்கி, அதன் பிறகு கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்த உத்தரவிட்டது.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களின் ஐந்தாண்டு பதவிக்காலம் நிறைவடைந்த பிறகு, பதவிக்காலம் முடிந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலாட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் அறிவுரையின்படி கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர் பட்டியலைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது,


தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம்
ஆணையர் (அரசுச் செயலாளரின் பதவி தரத்தில்)
ஆணையரின் நேர்முக எழுத்தர்
செயலாளர் (கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் பதவி தரத்தில்)
செயலாளரின் நேர்முக எழுத்தர்
சிறப்புப் பணி அலுவலர் (கூட்டுறவுத் துறையில் அலுவலவர் பணி நிலையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்)
கண்காணிப்பாளர் (நிர்வாக அலுவலர்)
கண்காணிப்பாளர் (தேர்தல் மற்றும் சட்டம்)
முதுநிலை ஆய்வாளர் (தேர்தல்–1)
முதுநிலை ஆய்வாளர் (தேர்தல்–2)
முதுநிலை ஆய்வாளர் (தேர்தல்–3)
முதுநிலை ஆய்வாளர் (சட்டப்பணி)
முதுநிலை ஆய்வாளர் (பணி தொகுதி)
முதுநிலை ஆய்வாளர் (கணக்கு)
தட்டச்சர்
கணினி நிரலர்
தட்டச்சர்